| | | |
|---|---|---|
| O.S No. | : | 253/2019 |
| DATE | : | 12.11.2025 |
| பெயர் | : | லட்சுமி |
| கணவர் பெயர் | : | முருகன் |

**<u>வாதி தரப்பு பி.வா. சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

7 . பி.வா.சா.ஆ–8 பட்டா 2007ல் வாங்கினோம். 03.04.2018 அன்று தான் அந்த பட்டா வாங்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி பட்டா தெருவை ஒட்டி உள்ள இடத்திற்கான பட்டா. இந்த சொத்து சம்மந்தமாக தான் வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி பட்டா சொத்திற்கு மற்றும் பிற சொத்துக்களுக்கான உரிமையை காட்டுவதற்காக பி.வா.சா.ஆ–10 செட்டில்மெண்ட் ஆவணம் தாக்கல் செய்துள்ளோம். அந்த ஆவணத்தில் 3 தாய் பத்திரங்கள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த 3 பத்திரங்களில் இந்திராணியிடம் இருந்து வாங்கியது தாவா சொத்து ஆகும். இந்திராணி எனது மகள் பெயரில் எழுதி வைத்த கிரைய பத்திரம் பி.வா.சா.ஆ–5. மேற்படி ஆவணத்தில் திண்ணையில் மேலண்டை பாகம் 8 3/4x 4 அடி 35 சதுரடி என்று குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது.

8. இந்திராணிக்கு மேற்சொன்ன 35 சதுரடி குப்பம்மாளிடம் இருந்து வரப்பட்டது. அந்த ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன். எனது பதிலுரையில் உயில் மூலமாக வந்தது என்று குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது. அந்த ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது போல் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்திராணிக்கு நான் சொல்வது போல் அந்த உயில் மூலம் எந்த பாத்தியமும் கிடைக்கவில்லை அதனால் தான் அந்த ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. 35 சதுரடியும் உயிலில் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ–1 ஆவணத்தில் 12பி சர்வே எண் 40 மனை எண் 1 தெரு பக்கம் தாண்டவராயன் முதலியார் பாகம் பாதி போக தென்புறம்

பின்பக்கம் பாதிக்கு கிழக்கு மேற்கு அடி 20 ½ வடக்கு தெற்கு 32 அடி என்றும், புழக்கடையில் வடக்கு தெற்கு 44 அடி, கிழக்கு மேற்கு 20 ½ அடி மேற்படி தாண்டவராய முதலியார் கீழண்டை பாதி பாகம் போக இப்போது கிரையம் செய்யும் பாகம் மேலண்டை கிழக்கு மேற்கு 10 ¼ அடி, வடக்கு தெற்கு 24 அடி இதில் உள்ள மெத்தை மற்றும் தட்டோடும், மேலண்டை தெரு திண்ணையில் பாதியும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தெரு திண்ணையின் பாதி பற்றிய நீளம், அகலம் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

9. தாண்டவராய முதலியார் பாகம் போக மீதமுள்ள பாகம் யார் பெயரில் உள்ளது என்றால் சாமிநாத முதலியாருக்கு கொடுத்தார் அவரிடம் இருந்து நாங்கள் வாங்கினோம். தாண்டவராய முதலியாரின் பாதி சொத்து எங்களுக்கு சொந்தமானது. பி.வா.சா.ஆ–2 பாகப்பிரிவினை பத்திரத்தில் சொல்லியுள்ள அழகானந்த முதலியார் தான் வாதியின் தந்தை ஆவார். அழகானந்த முதலியாரிடம் இருந்து தான் பின்புறம் பகுதியை எனது மகள் பெயரில் கிரையம் வாங்கப்பட்டது. அது பி.வா.சா.ஆ–6. அந்த ஆவணத்தின் படி அழகானந்த முதலியார் தெரு திண்ணை எதுவும் எங்களுக்கு விற்கவில்லை. சொத்து விவரத்தில் சாமிநாத முதலியார் வீட்டிற்கு கிழக்கு என்று ஜக்குபந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. பி.வா.சா.ஆ–6 ஆவணத்தில் நான் வாங்கியதுபோக புழக்கடையில் மீதமிருந்த பாதியை விற்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

10. பி.வா.சா.ஆ–3 குப்பம்மாளின் கிரைய பத்திரத்திலும் தெரு பக்கம் எந்த சொத்தும் விற்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. சொத்து விவரத்தில் தெரு திண்ணை பற்றி தான் குறிப்பிடப்பட்டுள்ளது, தெரு பக்கம் எதுவும் விற்பனை செய்ததாக குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான். தெரு திண்ணைக்கான நீளம், அகலம் குறிப்பிடப்படவில்லை என்றுசொன்னால் பாதி என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நாராசம் பொதுவானது என்றால் சரிதான். தெரு திண்ணை அமைந்த இடம்

யாருடைய பாகத்தில் உள்ளது என்று குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளதா என்றால் பாதி என்று சொல்லப்பட்டுள்ளது.

11. நான் இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பு எனது மகள் பெயரில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு பற்றி பிரச்சனை நடக்கும் போதும் வாதி என்னிடத்தில் தெரிவிக்கவில்லை. அந்த வழக்கில் எனக்கு அறிவிப்பு எதுவும் கொடுக்கவில்லை. வாதி இதற்கு முன்பு தாக்கல் செய்த வழக்கில் வீடு கட்டிட வரைபடம் மற்றும் பட்டா தாக்கல் செய்திருந்தார் அதை நான் பார்க்கவில்லை. எங்களுக்கு கிரையம் ஆகாத சொத்திற்கு தவறுதலாக பத்திரம் எழுதி பட்டா பெற்றுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. பழைய பட்டாவை நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. தவறுதலாக பட்டா பெற்றுள்ளேன், தாவா திண்ணையில் எவ்வளவு சொத்து எங்களுக்கு என்ன முறையில் பாத்தியப்பட்டு வந்தது என்பதை காட்டுவதற்கான உரிய ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

12. நான் எனது மகள் பெயரில் 35 சதுரடி (பி.வா.சா.ஆ–5) என்று எழுதிவிட்டு எனது பெயரில் செட்டில்மெண்ட் செய்யும்போது 50 சதுரடி (பி.வா.சா.ஆ–10) என்று மாற்றி எழுதியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி பி.வா.சா.ஆ–10 ஆவணத்தில் தெரு திண்ணை என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற தவறான எண்ணத்துடன் தவறான ஆவணங்கள் தயாரித்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல.

**இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக் கொள்ளப்படுகிறது.**

(S/d.Fanny Rajan)
Principal District Munsif,
Kancheepuram.